RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21135

OPEN ACCESS

கு. அழகிரிசாமி எனும் தமிழ் ஆளுமை

பா. இரவிக்குமார் [அ, *]

[அ] சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 605014, இந்தியா

Ku. Alagirisami the Tamil personality

B. Ravikumar [a, *]

[a] Subramania Bharathi School of Tamil, Language and Literature, Pondicherry University, Puducherry-605014, India.

* Corresponding Author:
paa.ravikumar1@gmail.com

Received : 02-12-2020
Accepted : 15-01-2021

Check for updates

ABSTRACT

For a long time, the Tamil literary world knew Alagirisami only as a short story writer. Even today, most people know Alagirisami only as a writer. But not many people know that he was a great essayist, a great translator, and a passion for painting. Pazha Adhiyaman has compiled all the articles of Ku Alagirisami and published them in two volumes in December 2023. The essays in the collection 'Naan Kandha Ezhuthalagal' help us to know about Alagirisami's quests, studies and techniques. This article has been written with the intention of identifying and analyzing the essays in this collection.

Keywords: Alagirisami, Pazha Adhiyaman, Naan Kandha Ezhuthalagal, story writer

முன்னுரை

கு. அழகிரிசாமியைத் தமிழ் இலக்கிய உலகம் சிறுகதை எழுத்தாளராக மட்டுமே நீண்ட காலம் அறிந்திருந்தது. இன்றும் பெரும்பாலானவர்களுக்கு அழகிரிசாமியை எழுத்தாளராக மட்டுமே தெரியும். ஆனால் அவர் சிறந்த கட்டுரையாசிரியர், ஆகச் சிறந்த மொழிபெயர்ப்பாளர், ஓவியத்தில் ஆர்வமுடையவர் என்பதைப் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கு.அழகிரிசாமியின் கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து, பழ.அதியமான், டிசம்பர் 2023-ஆம் ஆண்டு இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். காலச்சுவடு இத்தொகுதிகள் இரண்டையும் ஏறத்தாழ, 1,500 பக்கங்களுக்கு மேல் வெளியிட்டுள்ளது. தமிழ் இலக்கிய உலகமும், ஆய்வுலகமும் பழ.அதியமானுக்கு இதற்காக நன்றியைக் கூறவேண்டும். அழகிரிசாமி என்கிற பேராளுமையின் முழுமையை, பழ.அதியமான் அக்கறையுடனும், ஆய்வு நோக்குடனும் வெளிப்படுத்தியுள்ளார்.

அழகிரிசாமி தலைசிறந்த சிந்தனையாளர்; திறனாய்விலும், மொழிபெயர்ப்பிலும் ஈடுபாடு கொண்டவர்; பழந்தமிழ் இலக்கியத்திலும் புலமை மிக்கவர்; கம்பர், ஒட்டக்கூத்தர், ஔவையார், காளமேகப்புலவர், கடிகை முத்துப் புலவர், தத்துவப்பிரகாசர், படிக்காசுப் புலவர் போன்ற இடைக்காலப் புலவர்களையெல்லாம் ஆழ்ந்து படித்தவர் என்பதை இக்கட்டுரைத் தொகுதிகளின் மூலமே அறிய முடிகிறது. அன்னி பெசன்ட், சார்லி சாப்லின், ஜார்ஜ் மார்ஷல், பெர்னாட் ஷா, சி.வி.ராமன், ஆனந்த

குமாரசாமி போன்ற ஆளுமைகள் குறித்தெல்லாம் கு.அழகிரிசாமி கட்டுரைகளை எழுதியுள்ளார். அழகிரிசாமிக்கு நாட்டுப்புறவியல், நாடகம் போன்ற துறைகளில் ஈடுபாடு உண்டு. செகாவ், டால்ஸ்டாய், லெனின் ஆகியோரது கட்டுரைகளுள் சிலவற்றை நேர்த்தியாக மொழிபெயர்த்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. பண்பாட்டின்மீது ஆழமான பார்வையும், தனக்கேயுரிய முறையில் தெளிவும் கொண்டவர். 1923இல் பிறந்த கு.அழகிரிசாமி 1970 வரை, தான் வாழ்ந்த காலகட்டத்தின்மீது எதிர்வினையை ஆற்றிக் கொண்டு வந்துள்ளார். அனைத்து எழுத்தாளர்களுக்கும் எவ்வாறு தமிழ் ஆய்வுலகம் 'முத்திரை'யைப் பதிக்கின்றதோ, அவ்வாறே கு.அழகிரிசாமிக்கும் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவர் என்ற முத்திரையைக் குத்திவிட்டது.

உண்மையில், கு.அழகிரிசாமி மீதான ஆய்வுகள் இனிதான் தொடங்கப்பட வேண்டும். பழ.அதியமான், கு.அழகிரிசாமியின் 'நான் கண்ட எழுத்தாளர்கள்' என்னும் நூலையும் இருநூறு பக்க அளவில் (215) பதிப்பித்துள்ளார். இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் அவருடைய பெருந்தொகுதிகளில் இடம்பெறவில்லை.

கு.அழகிரிசாமியின் தேடல்களையும், படிப்பையும், நுட்பங்களையும் அறிய உதவுபவை 'நான் கண்ட எழுத்தளர்கள்' என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை அடையாளப்படுத்தும் நோக்குடனும் பகுப்பாய்வு செய்யும் எண்ணத்துடனும் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

பண்பாட்டு வரலாறு

கு.அழகிரிசாமி, தான் அறிந்த பத்து எழுத்தாளர்களின் ஆளுமைத் தன்மையைப் பதிவு செய்துள்ளார். டி.கே.சி., சி.தேசிக விநாயகம் பிள்ளை, எஸ்.வையாபுரிப் பிள்ளை, வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார், திரு. வி.க., வ.ரா., புதுமைப்பித்தன், வெ.சாமிநாத சர்மா, தி.ஜ.ர.., டி.எஸ்.சொக்கலிங்கம் ஆகியோரின் படைப்புகள், பழக்க வழக்கங்கள், வரலாறு, சுவையான நிகழ்வுகள் முதலியனவற்றைக் கட்டுரைகளாக வடித்துள்ளார். அழகிரிசாமி சந்தித்த ஆளுமைகளின் பண்புநலன்களாக மட்டும் இவற்றைப் பார்க்காமல், இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலப் பண்பாட்டு வரலாறாகவும் இக்கட்டுரைகளைப் புரிந்துகொள்ள வாய்ப்புள்ளது. இவர்களைத் தவிர, காருகுறிச்சி அருணாசலம், சக்தி. வை. கோவிந்தன், மஞ்சேரி எஸ்.ஈஸ்வரன், தொ.மு.சி.ரகுநாதன், துறைவன், ர.பா.மு.கனி, போன்றோரின் சுருக்கமான அறிமுகக் கட்டுரைகள் பின்னிணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன. மாக்சிம் கார்க்கி நினைவுக் குறிப்புகளாக எழுதிய லியோ டால்ஸ்டாய், ஆண்டன் செகாவ் பற்றிய கட்டுரைகளையும் கு.அழகிரிசாமி மொழிபெயர்த்துள்ளார்.

இவ்வளவு கட்டுரைகளையும் தான் எழுதுவதற்குக் காரணமாக இருந்தவர் மாக்ஸிம் கார்க்கிதான் என்பதை முன்னுரையில் மறவாமல் பதிவு செய்துள்ளார் அழகிரிசாமி.

> “இந்தப் புத்தகத்தை நான் எழுதுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் மாக்ஸிம் கார்க்கிதான். 13 வருஷங்களுக்கு முன் அவருடைய கட்டுரைத் தொகுதி ஒன்றையும், 'Days with Lenin', 'Fragments from my Diary' என்ற புத்தகங்களையும் ஒன்றையடுத்து ஒன்றாகப் படித்தேன். டால்ஸ்டாய், செஹாவ், லெனின்

> முதலியவர்களைப் பற்றி அவர் எழுதியிருந்த நினைவுக் குறிப்புகள் மிகவும் பிரமாதமாக இருந்தன." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.27)

என்று குறிப்பிடுகிறார் கு.அழகிரிசாமி. ஆக, புதுமைப்பித்தன், திரு.வி.க., வெ.சாமிநாதசர்மா போன்ற ஆளுமைகளின் சித்திரங்களைத் தீட்டுவதற்கு, மாக்ஸிம் கார்க்கி, காரணமாக இருந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மலாயாவுக்குத் 'தமிழ் நேசன்' பத்திரிகையில் பணிபுரிவதற்காகச் சென்றபோது, அந்த நாட்டு வாசகர்களின் தேவையை அறிந்தும் இக்கட்டுரைகளைக் கு.அழகிரிசாமி எழுதியுள்ளார் என்பதை அவருடைய முன்னுரையிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழ் மரபிலக்கியங்கள், புத்திலக்கியங்கள், மொழிபெயர்ப்பிலக்கியங்கள் முதலியவற்றில் பரிச்சயமுடைய அபூர்வமான எழுத்தாளராகவே கு.அழகிரிசாமியை மதிப்பீடு செய்ய முடிகிறது.

'சொல்லில் உயிர்க்கும் கணங்கள்' என்னும் தலைப்பில் ஓர் அற்புதமான பதிப்புரையை 'நான் கண்ட எழுத்தாளர்கள்' நூலுக்கு எழுதியுள்ளார் பழ.அதியமான். பதிப்புரை நீண்டதாக இருப்பினும், அழகிரிசாமி தான் கண்ட எழுத்தாளர்களின் சித்திரங்களை எவ்வாறு தீட்டியுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது. அப்பதிப்புரையின் ஒரு பகுதியை இங்கு அளிப்பது பொருத்தமானது.

> "நூலில் இடம்பெற்றுள்ள பத்து எழுத்தாளர்களுள் நால்வர் பிள்ளைமார், மூவர் முதலியார், மூவர் பிராமணர். 1940களில் தமிழ்நாட்டில் இவர்கள் தாம் எழுத்தாளர்கள். இலக்கிய உலகின் குறுக்குவெட்டுத் தோற்றத்தையும் இக்குறிப்புகளின் மூலம் வாசகர்கள் கண்டுகொள்ள முடியும். இன்றைக்கு கு.அழகிரிசாமியைப் போன்ற ஒரு எழுத்தாளர் இதே தலைப்பில் எழுதினால், அவர் தேர்ந்தெடுக்கும் எழுத்தாளர்களின் (சாதி) விகிதாசாரம் இப்படி இருக்க முடியாது. இதை ஒரு சாதாரண யூடியூபர்கூடச் சொல்லிவிடுவார். அப்படியிருக்க, இந்த நூலின் சமகாலப் பெறுமதி என்ன என்ற கேள்வி பிறக்கலாம். இக்குறிப்புகள் தரும் இலக்கிய சுலாரஸ்யம் தாண்டிக் கடந்த காலத்தைக் கற்று நிகழ்காலச் சூழலைப் புரிந்துகொள்ள உதவும் பரிசோதனை மாதிரிகள் என்பதாகவும் இவை பயன்படும் என்றே நினைக்கிறேன்." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.25-26)

நிகழ்காலச் சூழலைப் புரிந்துகொள்ள மட்டுமல்ல... கடந்த கால இலக்கிய, பண்பாட்டுச் சூழலை இன்றையத் தலைமுறையினர் புரிந்துகொள்ளவும், அழகிரிசாமியின் ஆளுமைத் தன்மையைப் புரிந்துகொள்ளவும் அந்நூலில் உள்ள கட்டுரைகள் பெரிதும் உதவுகின்றன. அவ்வகையில், இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலப் பண்பாட்டு வரலாறாகவும் அழகிரிசாமியின் கட்டுரைகள் விரிகின்றன எனலாம்.

கட்டுரைகளின் பொதுத்தன்மை

வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரை, டி.கே.சி.யை, திரு.வி.க.வை, வ.ரா.வை இன்றையத் தலைமுறையினர் அறிந்திருக்க அவ்வளவாக வாய்ப்பில்லை. பலருக்கு அவர்களுடைய நிழற்படங்கள்கூட அறிமுகமாகி இருக்காது. நவீன வசதிகள் கொண்ட இன்றைய உலகில், அப்படியே நிழற்படங்கள் பரிச்சயமாகியிருந்தாலும், அவர்களுடைய தோற்றங்கள் மற்றும் ஆளுமைகளைத் தெரிந்திருக்காது. கு.அழகிரிசாமி தன்னுடைய சொல்லோவியங்களால் அவர்களுடைய உருவங்களைக் கண்முன் நிறுத்துகிறார்.

சான்றாக, திரு.வி.க.வின் இயல்புகளை கு.அழகிரிசாமி, பின்வருமாறு சித்திரித்துள்ளதைக் குறிப்பிடலாம்.

> “பேசும்போது, குழந்தையைப் போல "என்னங்க "அப்படியாங்க?"என்று இவர் கேட்பது. இவருடைய தெய்வீகமான உள்ளத்தை நமக்குத் திறந்துகாட்டும். மேலும், பேசும்போது இடது கையின் ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மட்டும் நீட்டி, ஆட்டிக் கொண்டே பேசுவார். கண் இமைகளைக் குறுக்கி. விழிகளைப் படபடவென்று மூடி மூடித் திறப்பது இவருடைய வழக்கம். பிரசங்கம் செய்யும்போது அடிக்கடி ஏதாவது ஒரு பதத்தை மும்முறை சொல்லுவார். உதாரணமாக, "தமிழர் வாழ்வில் காணப்படுவது என்னை? அன்பு, அன்பு, அன்பு" என்பது போலவும், "காந்தியடிகள் போதிப்பது யாது? உண்மை, உண்மை. உண்மை" என்பது போலவும் கூறுவார். ஆடம்பரம் இவருக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காது. தலையை மொட்டையடித்திருப்பார். உச்சியில் நாலைந்து மயிர்களே காற்றில் ஆடிக்கொண்டிருக்கும். படுப்பது முரட்டுக் கோரைப் பாயில்தான். வீட்டில் கையினால் தைத்த ஒரு தலையணையைத் தலைக்கு வைத்துக்கொள்ளுவார். உடுப்பது கதராடை.” (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், பக். 76-77)

ஒவ்வொரு ஆளுமைகளின் உருவம், இயல்புகள், அவர்களுடைய வரலாறு, அவர்கள் எழுதிய நூல்கள், அந்த நூல்கள் உருவான பின்னணி, அவர்களுடைய தனித்தன்மைகள், சாதனைகள், சுவாரஸ்யமான நிகழ்வுகள் முதலியவற்றைக் குறிப்பிடுவதன் மூலம், இலக்கிய வரலாற்றுப் பொக்கிஷமாக இக்கட்டுரைகளைத் தீட்டிவிடுகிறார் கு.அழகிரிசாமி என்ற முடிவிற்கு வரலாம்.

கு.அழகிரிசாமியின் திறனாய்வுத் தன்மை

கு.அழகிரிசாமியின் திறனாய்வுத் தன்மையை எடுத்துரைக்க, வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் குறித்த கட்டுரை சிறந்த சான்றாக அமைந்துள்ளது. வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் ஊரான வெள்ளகாலில், அவரைச் சந்தித்த சுவாரஸ்யமான நிகழ்வை இக்கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார் கு.அழகிரிசாமி. தாம் பதிப்பித்த ‘கம்பராமாயண சாரம்’ என்னும் நூலை அளித்துவிட்டு, அதை எவ்வாறு வாசிக்க வேண்டும் என்று கூறும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் உறங்கச் சென்றுவிடும் நிகழ்வை வர்ணித்துவிட்டு,

> “வாழ்க்கையைத் தாம் வகுத்துக் கொண்ட ஒழுங்குமுறையினின்றும் சிறிதும் விலகாமல் நடத்திய தனிப்பெரும் பெரியார் இவர்.” (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.67)

என்று அவரை மதிப்பிடுகிறார் கு.அழகிரிசாமி.

ஆங்கிலத்திலும் தமிழிலும் அபாரமான புலமை கொண்ட வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் அகலிகை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம் முதலிய நூல்களை இயற்றியவர். ‘ஜான் மில்டனார் சரித்திரம்’ என்னும் வரலாற்று நூலையும் எழுதியவர். அவருடைய புலமையின் ஆழத்தைப் பல பாடல்களைச் சான்று காட்டி எடுத்துரைக்கும் கு.அழகிரிசாமி ஒரு முக்கியமான செய்தியைப் பதிவு செய்துள்ளார். கு.அழகிரிசாமியின் தனித்தன்மையையும், திறனாய்வுத் திறனையும் எடுத்துக் காட்டுவதாக இது அமைந்துள்ளது.

"வெ.ப.சு. புலமை மிகுந்தவர் எனினும், கவித்துவம் உடையவர் என்று கூற இயலாது. 'பண்டித நெறி'யில் இவர் சிறந்து விளங்கினாரேயன்றி, கவிஞராகத் திகழவில்லை. இவர் எண்ணற்ற பாடல்கள் இயற்றியிருப்பது இவருடைய தமிழறிவுக்குத்தான் சான்றாக இருக்கிறது. சிலேடை, யமகம், திரிபு என்ற சிலம்ப வித்தைகளில் இவருக்கு நாட்டம் சென்று விட்டதால் கவி நெறியிலிருந்து வெகு தூரம் விலகிப் போய்விட்டார்." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.70)

தமிழறிவு வேறு; இயல்பான கவித்துவம் வேறு என்கிற தெளிவு கு.அழகிரிசாமிக்கு இருந்துள்ளதையே இது காட்டுகிறது. புதுமைப்பித்தன், டி.கே.சி. போன்ற ஆளுமைகளுடன் பழகியதன் காரணமாகவும் இலக்கியம் பற்றிய நுட்பமான தேடல் அவருக்கு இருந்ததன் காரணமாகவும் இத்திறன் அழகிரிசாமிக்கு அமைந்திருந்தது என்று அவதானிக்கலாம்.

வெ. சாமிநாதசர்மா என்னும் மேதை

அரசியல் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று ஏறத்தாழ அறுபது நூல்களுக்கும் மேல் எழுதிய வெ.சாமிநாத சர்மாவைக் குறித்த கட்டுரையை கு.அழகிரிசாமியின் சிறந்த கட்டுரைகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். 17-09-1895 அன்று பிறந்த வெ.சாமிநாத சர்மா மிகுதியான அரசியல் நூல்களை எழுதியவர். பத்திரிகைகளில் பணியாற்றியவர். ஜப்பானிய விமானங்களிலிருந்து பத்திரிகாலயத்தின் மீது குண்டு விழும்போதுகூட, அலுவலகத்தின் உள்ளிருந்து, பத்திரிகையின் கடைசித் தலையங்கத்தை எழுதிக் கொண்டிருந்தார் என்னும் அரிய தகவலைப் பதிவு செய்துள்ளார் அழகிரிசாமி. வெ.சாமிநாத சர்மா பர்மாவிலிருந்து குடும்பத்தோடு கால்நடையாக நடந்து இந்தியா வந்து சேர்ந்ததையும், கூன் விழுந்ததையும், படுத்துக் கொண்டு பல நூறு பக்கங்களுக்கு எழுதியதையும், சக்தி காரியாலய உரிமையாளர் வை.கோவிந்தன் ஒரு சாமியாரை அழைத்து வந்து சிகிச்சை அளித்ததையும் சுவாரஸ்யம் குன்றாமல் எழுதியுள்ளார் கு.அழகிரிசாமி. திரு.வி.க.வைத் தன்னுடைய குருவாக ஏற்றுக் கொண்டவர் வெ.சாமிநாதசர்மா.

திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்ட மயிலாப்பூரில் திரு.வி.க.வின் படத்தைத் திறந்து வெ.சாமிநாதசர்மா ஆற்றிய ஓர் உரை வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. அதனை, மிக அருமையாகப் பதிவு செய்துள்ளார் கு.அழகிரிசாமி.

"கிரேக்க நாட்டில் அரிஸ்டாட்டில் என்ற மேதாவி இருந்தார். அவருடைய குரு, பிளேட்டோ என்ற மகா மேதை. மகா அலெக்ஸாண்டர் மன்னன், அரிஸ்டாட்டிலின் மாணவன். ஆனால், அரிஸ்டாட்டிலுக்கு, பிளேட்டோவின் மாணவன் என்பதால்தான் பெருமையே ஒழிய, அலெக்ஸாண்டருக்குக் குரு என்பதால் அல்ல..."

என்னைப் பலநூல்கள் எழுதிய ஆசிரியன் என்று இப்போது பாராட்டிப் பேசினார்கள். நூலாசிரியன் என்பதைவிட, திரு.வி.க.வின் சிஷ்யன் என்பதால்தான் எனக்குப் பெருமை. ஆனால், நான் அரிஸ்டாட்டில் அல்ல. திரு.வி.க.வோ பிளேட்டோ." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.108)

திரு.வி.க., வெ.சாமிநாத சர்மா போன்ற அறிஞர்களை மறந்துவிட்ட தமிழ்ச் சமூகத்திற்கு, அவர்கள் யார் என்பதை நினைவுறுத்தும் கட்டுரை

அழகிரிசாமியினுடையது. ரூஸ்ஸோ, மாஜினி, மார்க்ஸ், அட்டா டூர்க், ஹிட்லர் போன்ற பலருடைய வாழ்க்கை வரலாறுகள், துருக்கி, ருஷ்யா போன்ற நாடுகளின் வரலாறுகள், 'ருஷ்யாவின் சமுதாய ஒப்பந்தம்', 'இங்கர்சாலின் மானிட ஜாதியின் சுதந்திரம்' போன்ற நூல்களை மொழிபெயர்த்த வெ.சாமிநாத சர்மாவைப் பின்வருமாறு மதிப்பிடுகிறார் கு.அழகிரிசாமி.

> "அரசியல்வாதிகளைப் பற்றிய நூல்கள், அரசியல் தத்துவங்களைப் பற்றிய நூல்கள், அரசியல் வரலாற்று நூல்கள் - இப்படிப்பட்ட நூல்களை எழுதியவர்களில், மொழிபெயர்த்தவர்களில் தமிழகத்தில் தலைமை ஸ்தானம் வகிப்பவர் வெ.சாமிநாதசர்மா." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள்,, ப.110)

கு.அழகிரிசாமியும் எஸ்.வையாபுரிப்பிள்ளையும்

> "தமிழுக்கு அகத்தியரைப் போன்று கல்விப் பெருங்கடலாகத் தமிழ்நாட்டில் நம் காலத்தில் வாழ்ந்தவர் பேரறிஞர் எஸ்.வையாபுரிப்பிள்ளை" (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.51)

என்று வையாபுரிப்பிள்ளையைக் கட்டுரையின் தொடக்கத்தில் மதிப்பிடுகிறார் கு.அழகிரிசாமி. 1946ஆம் ஆண்டு வையாபுரிப்பிள்ளையைச் சந்தித்தது, புதுமைப்பித்தனுடன் இணைந்து அவர் இல்லத்தில் அளவளாவியது, தமிழ் ஆராய்ச்சிகளைக் குறித்து உரையாடல் நிகழ்த்தியது, திருமழிசையாழ்வாரைக் கணிதக் கவிஞராக வையாபுரிப்பிள்ளை மதிப்பிட்டது என்று பல செய்திகளை இக்கட்டுரையில் காணலாம். 'கவிதை' குறித்து, கு.அழகிரிசாமி என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதை, வையாபுரிப்பிள்ளை குறித்த இக்கட்டுரையில் காண இயலுகிறது.

"நம் தமிழ்நாட்டில் வெகு காலமாக ஒரு தப்பபிப்பிராயம் இருந்து வருகிறது. விருத்தமோ வெண்பாவோ எழுதக்கூடிய ஒருவனை அதிவேகமாகக் "கவி" என்று சொல்லி விடுவார்கள் - அந்த விருத்தத்திலும் வெண்பாவிலும் கவித்துவம் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி. இந்தக் கண்கொண்டு பார்த்தால், விருத்தத்தில் எழுதப்பட்ட வைத்தியப் புத்தகத்தையும் ஜோதிடப் புத்தகத்தையும்கூடக் கவிதை நூல்கள் என்றுதான் சொல்ல வேண்டும்!

சிவனைப் பற்றிப் பாடியது என்பதற்காக எந்தச் செய்யுளை யும் கவி என்று பாராட்டிவிட முடியாது. அதேபோல்தான் விஷ்ணுவைப் பற்றியும் பிற தெய்வங்களைப் பற்றியும் இயற்றப் பட்ட செய்யுட்களையும் மதிப்பிட வேண்டும். யாரைப்பற்றிப் பாடியிருந்தாலும் சரி, அவை கவிகளாக இருக்க வேண்டும். அப்படி இல்லாதவரை அவை வெறும் பக்தி நூல்களே ஒழிய, கவிதை நூல்கள் அல்ல. நம் தமிழ்நாட்டில் மதாபிமானத்துடன் தங்கள் மதத்தைப் போற்றி இயற்றப்பட்ட செய்யுட்களையெல்லாம் கவிகள் என்றே பலர் சாதிப்பார்கள். இதன் பலனாகத்தான் ஒன்றுக்கும் உதவாத,உயிரோ சுவையோ இல்லாத செய்யுள் நூல்கள் ஆயிரக்கணக்கில் தோன்றத் தொடங்கின; அழிந்து போவதற்கில்லாமல் அவை இன்னும் திரும்பத் திரும்ப அச்சாகியும் வருகின்றன.

கவிதைக் கண்ணோட்டத்துடன் தயவு தாட்சண்யம் பார்க்காமல் உண்மையைக் கூறுவதாக இருந்தால், கம்ப ராமாயணத்தையும் மற்றும் சுமார் இருபது புத்தகங்களையும் தவிர வேறு எந்தத் தமிழ் நூலையுமே கவிதை நூல் என்று கூற முடியாது. அவை வெறும் செய்யுள் குப்பைகளைத் தவிர வேறில்லை. தமிழ்நாட்டில்

இந்தக் குப்பைகள் மலைகளாகக் குவிந்திருக்கின்றன. ஊருக்கு ஒரு புராணம் வீதம் பாடிய எல்லாத் தலபுராணங்களும் இந்தக் குப்பையில் பாதியாக உள்ளன. ஒவ்வொரு தலபுராணத்திலும் ஆயிரக்கணக்கான செய்யுட்கள் உண்டு." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், பக். 55-56)

இவ்வளவு நீண்ட பத்தியை மேற்கோளாகக் குறிப்பிடக் காரணம், கவிதை நூல்களைப் பற்றி அழகிரிசாமி எத்தகைய எண்ணத்தைக் கொண்டிருந்தார் என்பதை விளக்குவதற்காகவே. இன்றைய சூழலிலும் அழகிரிசாமியின் கருத்துகள் பொருத்தமாக உள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும் (Alagirisami, 1961). சிறுகதை எழுத்தாளராக இருந்தாலும், கவிதை வடிவம் குறித்த தெளிவான பார்வை கு.அழகிரிசாமிக்கு இருந்தது என்பதையே இது புலப்படுத்துகிறது. எஸ்.வையாபுரிப்பிள்ளையைப் பின்வருமாறு மதிப்பிட்டுள்ளார் கு.அழகிரிசாமி.

> "தமிழ் மொழியில் அவர் ஆராய்ச்சி செய்யாத புத்தகங்களே கிடையாது. ஒவ்வொரு நூலையும் எத்தனையோ தடவை திரும்பத் திரும்பத் துருவி ஆராய்ந்திருக்கிறார். அவருடைய நூல் நிலையத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகத்திலும் அவர் குறிப்புக்கள் எழுதி வைத்திருப்பதைக் காணலாம். இதே போல் சமஸ்கிருதத்திலும் அவர் புலமை உடையவர் உலக இலக்கியத்தில் உள்ள தலைசிறந்த இலக்கியங்களை யெல்லாம் கற்று அறிவுக் கடலைக் கடந்தவர். முந்திய வருஷம் பிரபலமான ஒரு ஆசிரியருடைய நூலையும், முந்திய வாரம் புதிதாகக் கடைக்கு வந்த ஒரு நூலையும்கூட வாங்கிப் படித்து வைத்திருப்பார்." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.60)

புதுமைப்பித்தன், தொ.மு.சி.ரகுநாதன் போன்ற எழுத்தாளர்களை மட்டுமல்ல… எஸ்.வையாபுரிப்பிள்ளை, டி.கே.சி. போன்ற அறிஞர்களையும் கு.அழகிரிசாமி வியந்து பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

டி.கே.சி. குறித்த சித்திரம்

கு. அழகிரிசாமி சிலாகித்த மனிதர்களுள் ஒருவர் டி.கே.சி. 'மாந்தருள் ஓர் அன்னப்பறவையாக' எவ்வாறு கி.ரா. டி.கே.சி.யை வியந்தாரோ அவ்வாறே கு.அழகிரிசாமியும் டி.கே.சி.யை வியந்துள்ளார். டி.கே.சி. குறித்த அழகிரிசாமியின் கட்டுரையில் பல்வேறு சம்பவங்கள் சுட்டப்பட்டுள்ளன. கம்பராமாயணத்தை, தான் திருத்தவில்லை என்றும், அசல் உருவத்தைக் கண்டுபிடிக்க முயற்சி மேற்கொண்டதாகவும் டி.கே.சி. கூறியதாக, கு.அழகிரிசாமி குறிப்பிடுவது இலக்கிய உலகில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்று.

> "மற்றத் தமிழ்ப் பாடல்களில் குறைகள் இருந்தால் அவற்றைத் திருத்தி, நல்ல பாடல்களாக்கி அனுபவிக்கிறோம். ஆனால், கம்பர் பாடல்கள் குறையில்லாதவை. அவற்றைத் திருத்த வேண்டிய அவசியமே இல்லை. நான் கம்பராமாயணப் பாடல்களில் திருத்தம் செய்வதாகச் சொல்லுகிறார்கள். அது தவறு இடைக்காலத்தில் கம்பராமாயணத்தில் சில பிழைகள் வந்து புகுந்து விட்டன. அந்தப் பிழைகளை ஒதுக்கி, நாம் கம்பரை அனுபவிக்க முயல்கிறோம். கம்பருடைய பாடல்களின் அசல் உருவத்தைக் கண்டுபிடிப்பதே நம்முடைய

முயற்சி. இதைத் திருத்தம் என்று சொல்லுவது எப்படி?" (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.32)

டி.கே.சி.யின் தமிழ்ப்பற்றுக் கூட ரசனையில் இருந்து பிறந்த ஒன்று என்பதை கு.அழகிரிசாமி பதிவு செய்துள்ளார். டி.கே.சி.க்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். ஆனால், தமிழனால் ஆங்கிலத்தை அனுபவிக்க முடியாது என்பது அவருடைய நிலைப்பாடு.

"தமிழன்தான் தமிழை அனுபவிக்க முடியும்; அதே போலத் தமிழன் தமிழைத்தான் அனுபவிக்க முடியும். ஆங்கிலக் கவியைப் படித்துத் தமிழன் அனுபவிப்பதாகச் சொல்லிக்கொள்ளுவதோ, தமிழ்க்கவிதையை ஆங்கிலேயன் படித்து அனுபவிக்கமுடியும் என்று சொல்வதோ வெறும் சவடால் தனம்" என்று டி.கே.சி. எண்ணிறந்த தடவைகள் எழுத்திலும் பேச்சிலும் தெரிவித்திருக்கிறார். பிற பாஷையின் சொற்களைப் புரிந்துகொள்ள முடியுமே ஒழிய, அனுபவிக்க முடியாது என்று அவர் கூறுவார்." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.35)

டி.கே.சி.யைப் பற்றிய கு.அழகிரிசாமியின் நீண்ட கட்டுரை, அவருடைய குண இயல்புகளை, பழக்க வழக்கங்களை, தமிழ்மொழி, கவிதை, காவியம், முதலான பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தியுள்ளது. தற்காலப் பள்ளிக் கூடங்களும் சர்வகலா சாலைகளும் (பல்கலைக்கழகங்கள்) அறிவைக் கெடுத்து விடுகின்றன; எனவே, அவற்றை இடித்துத் தள்ள வேண்டும் என்பது டி.கே.சி.யின் நிலைப்பாடாக இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆங்கிலக் கவிதைகளைக் கூட, தமிழில்தான் போதிக்க வேண்டும் என்றவர் டி.கே.சி. என்பதையும் இக்கட்டுரையில் கு.அழகிரிசாமி பதிவு செய்துள்ளார் (Alagirisami, 2015).

புதுமைப்பித்தனும் கு.அழகிரிசாமியும்

கு.அழகிரிசாமி, தன் வாழ்நாளில் மிகுதியாகச் சிலாகித்த எழுத்தாளர் புதுமைப்பித்தன்தான். புதுமைப்பித்தன் குறித்த நீண்ட கட்டுரை, புதுமைப்பித்தனுடனான கு.அழகிரிசாமியின் நட்பு, அவருடைய மேதைமை, தோற்றம், நடை உடை பாவனைகள், அவருடைய மன உலகம், இலக்கியம் குறித்த எண்ணங்கள், யாவற்றையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. ஓர் எழுத்தாளன் மற்றொரு எழுத்தாளனை எவ்வாறு வியந்துள்ளான் என்பதை அறிய இன்றைய வாசகர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய கட்டுரை இது. உணவு விடுதியில் உணவருந்தும் வேளையில்கூட, திருக்குறளை நயமாகச் சொன்ன புதுமைப்பித்தனின் மேதைமையை கு.அழகிரிசாமி பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"மயிலாப்பூர் ஹோட்டல் ஒன்றில் புதுமைப்பித்தன் ரகுநாதன், நான் மூவரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். பாதாம் அல்வாவைப் பார்த்துவிட்டு, இது பாதாம் பருப்பில் செய்யப்பட்டதல்ல, பார்ப்பதற்குத்தான் பாதாம் அல்வா மாதிரி இருக்கிறது" என்று குறிப்பிடுவதற்காக 'மக்களே போல்வர் கயவர்' என்ற திருக்குறள் அடியை மட்டும் சொன்னாராம் புதுமைப்பித்தன்." (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.20)

இச்சம்பவத்தைப் பதிப்பாசிரியர் பழ.அதியமான் தன்னுடைய பதிப்புரையில் பதிவு செய்துள்ளார். புதுமைப்பித்தனின் சிறுகதைகளைச் சிலாகிக்கும் கு.அழகிரிசாமி அவருடைய நாவல்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் மீது கடுமையான

விமர்சனங்களைத் தொடுத்துள்ளார். ஆனால், இவற்றைப் புதுமைப்பித்தன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைப் பின்வரும் பதிவு உறுதிப்படுத்துகிறது.

> “புதுமைப்பித்தன் எழுதிய புத்தகங்களில் தலைசிறந்தவை அவருடைய சிறுகதைத் தொகுதிகளே, நாவல்கள் என்று இரண்டொன்று எழுதினார். அவை சாதாரணமானவை. நாடகமும் அப்படியே. கட்டுரைகள் மட்டும் கதைகளைப் போலச் சிறப்புடையவை. கவிதைகளை மின்வெட்டு மாதிரியும், ஆற்றல் மிக்க சொற் பிரயோகங்களுடனும் இயற்றுவார். அவர் மொழிபெயர்த்த மேல்நாட்டுக் கதைகள் பல. அவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர பிற யாவும் சாதாரணமானவையே. ஆனால், இதைப் புதுமைப்பித்தன் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்! தாம் மொழிபெயர்த்த கதைகள் யாவும் சிறந்தவையே என்று சாதித்தார்” (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.103)

இருபதாம் நூற்றாண்டின் ஒப்புயர்வற்ற தமிழ் இலக்கியப் பிரம்மாக்கள் என்றே பாரதியையும் புதுமைப்பித்தனையும் மதிப்பிட்டுள்ளார் கு.அழகிரிசாமி. மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் புதுமைப்பித்தன் நாவல்களாக எழுதத் திட்டமிட்டிருந்தார் என்ற பதிவு புதுமையானது மட்டுமல்ல; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கு.அழகிரிசாமியின் கட்டுரைகள் இல்லையென்றால், புதுமைப்பித்தன் குறித்த இப்படிப்பட்ட கூடுதல் தகவல்களை நாம் இழந்திருப்போம்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையை எஸ்.வையாபுரிப்பிள்ளையும், டி.கே.சி.யும் எவ்வாறு புகழ்ந்துள்ளனர் என்பதை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் மேற்கோள்கள் காட்டும் அழகிரிசாமி, உருக்கமாகவும், சோக ரசத்துடனும், பக்திச் சுவையுடனும் பாடுவதில் கவிமணி வல்லவர் என்று மதிப்பிட்டுள்ளார். “தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை நடை மிக மிகச் சரளமானது; தட்டுத் தடங்களற்ற ஆற்றொழுக்குப் போன்றது” என்றும், “தமிழ்ப் பண்பும் தமிழ் மணமும் நிறைந்திருப்பது” என்றும் குறிப்பிடும்போது, சுருக்கமாகவும் சரியாகவும் மதிப்பிடும் அழகிரிசாமியின் திறனை வியக்காமல் இருக்க முடியவில்லை.

வ.ரா.வைப் பற்றிக் குறிப்பிடும்போது,

> “வ.ரா. ஒரு தனிப் பிறவி. தயவு தாட்சண்யம் பார்க்காமல் தம் மனசில் பட்டதைப் படபடவென்று சொல்லி விடுவார். புகழத் தொடங்கினாலும் அதற்கு ஒரு எல்லை இராது. யாரையாவது திட்ட ஆரம்பித்தாலும் வசைபுராணம் லேசில் முடியாது.” (கு.அழகிரிசாமி, நான் கண்ட எழுத்தாளர்கள், ப.79)

என்கிறார் அழகிரிசாமி. சுருக்கமான சொற்களில், வ.ரா.வின் ஆளுமைப் பண்பைச் சித்திரிக்கும் கு.அழகிரிசாமியின் மொழிநடை கவனிக்கத்தக்கது. எந்த வார்த்தையையும் நீக்க இயலாத சொற்சித்திரம்.

வ.ரா. க்ஷவரத் தொழிலாளி, சலவைத் தொழிலாளி, காய்கறி விற்பவன் - இப்படிப்பட்டவர்களை வர்ணித்துப் பேனாச் சித்திரங்களை வரைந்தவர் என்ற செய்தி புதுமையானது. ரிக்ஷாக்காரன் கூடப் புரிந்துகொள்ளும்படியாகத் தமிழ் எழுத வேண்டும் என்பார் என்று வ.ரா.வைப் பற்றிக் குறிப்பிடுகிறார் அழகிரிசாமி.

முடிவுரை

சில கருத்துகளை வலியுறுத்தி இக்கட்டுரையை நிறைவு செய்யலாம். கு.அழகிரிசாமியின் கட்டுரைகள் இருபதாம் நூற்றாண்டின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை அறிந்துகொள்ளத் தக்க வகையில் உள்ள தகவல் களஞ்சியங்கள். ஒவ்வொரு எழுத்தாளரின் வாழ்க்கையை, அவர்களுடைய இலக்கிய நோக்கை, பண்பாட்டுப் புரிதல்களை அறிய உதவும் அரிய கருவூலங்கள். புதிய தகவல்களைத் தரும் இலக்கியப் பேழைகள். புனைவுகளின் தரத்திற்குப் புனைவில்லாத கட்டுரைகளை உயர்த்தியிருப்பது அழகிரிசாமியின் மேதைமை. ஒரு காலத்தில், எழுத்தாளர்கள் எல்லோரும் சாதனைகளுக்கு மத்தியிலும் தம்மைத் தாழ்த்திக் கொண்டு, பண்புகளுடனும் நிறைவுடனும் எவ்வாறு தமிழுக்குத் தொண்டாற்றினார்கள் என்பதை அறிய உதவுபவை, இவ்வெழுத்துகள். கு.அழகிரிசாமியின் சிறுகதைகள் வாழ்க்கையின் சித்திரங்கள் என்றால், அவருடைய கட்டுரைகள் அவர் வாழ்ந்த காலகட்டத்தின் சித்திரங்கள் எனலாம்.

References

Alagirisami, K. (1961) Nan Kanda Eluthalarkal, Kalachuvadu Pathippagam, Nagarkovil, India
Alagirisami, K. (2015) Alagirisami Katturaikal, Ananya Pathippagam, Chennai, India

Funding: NIL
Acknowledgement: NIL
Conflict of Interest: NIL
About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)
© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License